இதனைப்பற்றி என்ன? ....

# கர்த்தரின் பந்தியிலே ஐக்கியம்

கர்த்தருடடைய பந்தியிலே ஐக்கியந்தான் "நெருங்கிய" அல்லது "மூடிய தொடர்புறவு" வழமைக்கான அடிப்படையாகும். ("நெருங்கிய தொடர்புறவு" மற்றும் "மூடிய தொடர்புறவு" ஆகிய இரு பதங்களுமே ஒரே வழமையினையே குறிப்பதாகும்). இந்தத் துண்டுப் பிரசுரமானது நெருக்கமான தொடர்புறவு பற்றிய வழமையினைப் பாராட்டவும், புரிந்துகொள்ளவும், பிறருக்கு அதனை விளங்கப் படுத்தவும் உதவிடும்.

## தனது வார்த்தையைப்பற்றித் தேவன் கற்பிப்பது என்ன?

"இயேசு அப்பத்தை எடுத்து, நன்றிகூறி அதனைப் பிட்டுத் தனது சீடர்களுக்குக் கொடுத்துக் கூறியதாவது, "இதை வாங்கிப் புசியுங்கள்; இது என் சரீரமாய் இருக்கிறது." பின்பு அவர் பாத்திரத்தையும் எடுத்து, நன்றிகூறி அவர்களிடம் வழங்கிக் கூறியதாவது, "அனைவரும் இதிலிருந்து பானம் பண்ணுங்கள். இது புதிய உடன்படிக்கைக்கான என் இரத்தமாய் இருக்கிறது. அநேகரின் பாவமன்னிப்புக்கான இது சிந்தப்பட்டது." (ஒப். மத்தேயு 26:26–28; மாற்கு 14:22–25; லூக்கா 22:14–20; 1 கொரி. 11:17–29).

"அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும் ஐக்கியத்திலும் அப்பம் பிட்குதலிலும் ஜெபித்தலிலும் தரித்திருந் தார்கள்" (அப். நட. 2:42).

"..நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்திலே பானம் பண்ணும்போதெல்லாம், கர்த்தர் வருமளவும் அவரது மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள். இப்படியிருக்க, எவன் அபாத்திரமாய்க் கர்த்தருடைய அப்பத்தைப் புசித்து, அவருடைய பாத்திரத்திலே பானம்பண்ணுகிறானோ, அவன் கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும்குறித்துக் குற்றமுள்ளவனாய் இருப்பான். எந்த மனுஷனும் தன்னைத்தான் சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணக்கடவன். என்னத்தினாலெனில், அபாத்திரமாய்ப் போஜனம் பண்ணுகிறவன், கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால், தனக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி போஜனம் பண்ணுகிறான்." (1 கொரி. 11: 26–29).

## கர்த்தரின் பந்தியைப்பற்றி லூத்தரன் சபை நம்புவது என்ன?

அப்பம் மற்றும் ரசத்திலே கர்த்தரின் பந்தியானது எமது கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் மெய்யான சரீரமாயும் இரத்தமாயும் உள்ளதெனவும், கிறிஸ்தவர்களாகிய எமக்கு உண்ணவும் குடிக்கவும் எனத் தரப்பட்டுள்ளது எனவும் லூத்தரன் சபையானது நம்பி, கற்பித்து, அறிக்கையிட்டு வருகிறது. பந்தியில் அப்பமும் இரசமும் கிறிஸ்துவின் மெய்யான சரீரமாயும் இரத்தமாயும் உள்ளதெனவும், ஐக்கியம் கொள்ளும் அனைவரின் வாய்களுக்கும் அவை வழங்கப்பட்டு பெறப்படுவதாக உள்ளதெனும் நிலைப்பாட்டை நாம் கொண்டுள்ளோம். "உங்களது பாவமன்னிப்புக்கா வழங்கப்பட்டு சிந்தப்பட்டது" எனும் சத்தியத்தை நம்புகிறவர்கள் பாவ மன்னிப்பையும் ஜீவனையும் இரட்சிப்பையும் அதனால் பெற்றுக்கொள்கிறார்கள். சரீரக உண்டுதல் மற்றும் குடித்தல் ஆகியவற்றுடனான இந்த வாக்குத்தத்தமே இந்த திருவருட்சாதனத்தின் பிரதான காரியமாகும்.

கர்த்தரின் பந்தியைப்பற்றி, திருப்பலிப்பூசை செய்வதானது மனிதனை அவனது பாவங்களில் இருந்து விடுவிக்கும் எனும் கண்ணோட்டம் அல்லது பரிசுத்தப்படுத்தப்பெற்ற அப்பமும் இரசமும் மெய்யாகவே கிறிஸ்துவின் சரீரமாயும் இரத்தமாயும் மாறுகிறது எனும் விளக்கம் போன்ற தவறான விளக்கங்களை லூத்தரன் சபை நிராகரித்து அதனைக் கடிந்துகொள்ளவும் செய்கிறது. மேலும் அப்பம் மற்றும் ரசத்தின்கீழ் கர்த்தரின் பந்தியானது ஐக்கியங் கொள்பவர்களின் வாய்களுக்குப் பெறப்படும் கிறிஸ்துவின் சரீரமும் இரத்தமும், ஆக ஆன்மீக ரீதியில் மட்டுமே விசுவாசத்தால் இருதயத்தில் பெறப்படுகிறது என்பதையோ அல்லது அப்பமும் இரசமும் எமது கர்த்தரின் தொலைதூரமான சரீரமும் இரத்தமும் பற்றிய சின்னங்கள் மாத்திரமே எனும் கண்ணோட்டதையும் நாம் நிராகரித்து கடிந்துகொள்ளவும் செய்கிறோம்.

## கர்த்தரின் பந்தியானது எப்படியாக சபையின் ஐக்கியத்தின் புலப்பாடாக உள்ளது?

கர்த்தரின் பந்தி என்பது எப்போதுமே தனிநபர்த்துவ விடயமாக இருந்தாலுங்கூட, அது எப்போதுமே பிரத்தியேக விடயம் கிடையாது. அநேமாக பராமுகமாக விடப்படும் முக்கியமானதோர் சத்தியம் அது. ஒரே பீடத்திலே ஐக்கியம் கொள்பவர்கள் அதன் மூலமாக தாம் அப்போஸ்தலரின் உபதேசத்திலே ஐக்கியப் பட்டிருப்பதாகப் பகிரங்கமாகப் பிரகடனப்படுத்துகின்றனர் (அப். நட. 2:42). எனவே, கர்த்தரின் பந்தியிலான ஐக்கியமானது சபை ஐக்கியமாகும். இதுதான் பரிசுத்த வேதாகமத்தின் 1 கொரி. 10 மற்றும் 11 பகுதிகளால் கற்பிக்கப்படுகிறது. இந்த உண்மையை எமது சபையொன்றின் போதகர்கள் பின்வருமாறாக விளங்கப் படுத்தியுள்ளார்.

"ஒரே அப்பம், ஒரே ரொட்டித்துண்டிலே நாம் உண்பதுபோலவே, இந்தத் துண்டை உண்ணும் நாம் அனைவருமே ஒரே சரீரமாக இருக்கிறோம். ஒரே ரொட்டித்துண்டை நாம் உண்பது ஒரே சரீரத்துக்குள் எம்மை ஒன்றிணைக்கிறது. கர்த்தரின் பந்தியிலே நாம் பங்கேற்பதானது, நாம் கிறிஸ்துவுடன் ஐக்கியங்கொள்வது மாத்திரமன்றி, கர்த்தரின் பந்தியிலே ஐக்கியங்கொள்ளும் அனைவருடனும் நாம் ஐக்கியமாக உள்ளோம் என எமது பகுதியிலே விடுக்கும் ஒரு பகிரங்க அறிவித்தலாகும். நாம் அனைவரும் ஒரே அப்பத்தையே உண்கிறோம், கிறிஸ்துவின் சரீரம். அந்தச் செயல்மூலம் நாம் ஒருவருக்கொருவராக உரியவர்கள் என்பதைச் சுட்டிக்காட்டுகிறோம். கர்த்தரின் பந்தியிலே உண்ணும் கிறிஸ்தவர்களாகிய நாம் அனைவருமே ஒரே ஆன்மீக குடும்பமாக எம்மை வழங்கும்படிக்காக, கிறிஸ்துவின் சரீரத்தை உண்டு அவரது இரத்தத்தைப் பானம் பண்ணுகிறோம். ஒன்றாக நாம் உண்டு புசிக்கும் கிறிஸ்துவின் உடலும் இரத்தமும் இரத்தத்தின் பிணைப்புக்களை விடவும் எமமை அதிக நெருக்கமாக ஒன்றாகப் பிணைக்கிறது. நாம் கிறிஸ்துவுக்குள் எம்மை சகோதர்களாயும் சகோதரிகளாயும் பிரகடனப் படுத்துகிறோம். 'பீடத்து ஐக்கியமானது சபையின் ஐக்கியம்' என்று கூறும் வேத வசனத்தின்மீது நாம் சார்ந்துநிற்கிறோம்.

"கொரிந்தியரில் உள்ள இந்தப்பகுதியானது ஒன்றிப்புவாதத்தைத் தகர்க்கும் தாக்குதலாய் உள்ளது. எமது ஐக்கியத்துக்கு வேறுபட்டுள்ள நம்பிக்கையுள்ளவர்களை ஏற்றுக் கொள்வதும் அதன்மூலம் சபையின் ஐக்கியத்துக்கு அவர்களை அனுமதிப்பதும், அதற்குத்தானே முரண்பட்ட விடயமாகும். ஏனெனில், ஒரே பீடத்தண்டை சேர்பவர்கள் ஒன்றாக உள்ளதாக அறிக்கை யிடுகின்றனர் – கிறிஸ்தவ சத்தியக்கோட்பாடு மற்றும் நடைமுறை யிலே ஒன்று என்கின்றனர் – ஆனால் நிஜத்திலோ அவர்கள் அதற்கு இணங்க மறுக்கின்றனர். நாம் கொண்டுள்ள நம்பிக்கு வேறுபட்டதொரு விசுவாசத்தை உண்மையிலேயே அறிக்கையிடுவோர் கர்த்தரின் பந்தியிலே சேர்வதென்பது வெட்கங்கெட்ட மாய்மாலமாக இருக்கும்" (*ஸ்ரூயெக்ஹார்ட் Stoeckhardt, 1 கொரிந்தியர், பக். 60–61*).

## கர்த்தரின் பந்தியிலே ஐக்கியம்பற்றி என்ன?

எமது சபையின் வேறொரு போதகர் கர்த்தரின் பந்தி ஏன் சபை ஐக்கியத்தின் புலப்பாடு என்பதையிட்டு பின்வருவதைக் கூறியுள்ளார்:

> "பரிசுத்த பந்தியானது சபையின் அடையாளங்களுள் ஒன்று, சபையின் பதாகைகளுள் ஒன்று, சபையின் சத்தியக்கோட்பாடு மற்றும் விசுவாசத்தின் இலச்சினைகளுள் ஒன்று (ரோமர் 4:11; பார்க்கவும் 1 கொரி. 10:21, யாத். 12:48). எந்த சபையிலே ஒருவர் பரிசுத்த பந்தியைப்

பெற்றாலுங்கூட, அவர் அந்த சபையையும் அதன் சத்தியக்கோட்பாட்டையும் அறிக்கையிடுகிறார். தான் பெறும் பரிசுத்த பந்தியிலே ஐக்கியம் கொள்வோருடன் ஒருவர் நுழையும் சகோதர ஐக்கியத்துவத்தை விடவும் மேலான உள்ளான ஐக்கியம் இருக்கமுடியாது... மெய்யான பிரசன்னத்தை அறிக்கை யிடுபவருங்கூட, எமது வைதீக சபையிலே அங்கத்தவராக இல்லாமல், ஒரு ரோமன் கத்தோலிக்கனாயோ, சீர்திருத்த சபையினராயோ, சுவிசேஷகத்துவரென அழைக்கப்படுபவராயோ, ஒன்றிப்பு வாதத்திரனராயோ, மெதடிஸ்தராயோ, பாப்திஸ்தராயோ, சுருங்கக்கூறினால் தவறும் ஐக்கியத்து அங்கத்தவராயோ இருந்தும், ஆனாலும் ஐக்கியப்பட விரும்புவாராயின், மரணத்தைத் தவிர மற்றப்படி சாதாரணமாக அனுமதிக்க முடியாது. ஏனெனில், திருவருட்சாதனமானது, அது விசுவாசத்தின் இலச்சினையாகவும், அது நிர்வகிக்கப்படும் ஐக்கியத்தின் பதாகையாகவும் இருப்பதாலாகும்" (வோல்தர், *மேய்ப்புப்பணி இறையியல்,* பக். 110–111, 149).

## நெருங்கிய ஐக்கியத்தைக் கடைப்பிடடிப்பதற்கான லூதரன் சபையின் நோக்கம் என்ன?

இறையியல் மற்றும் சபை உறவுகள் பற்றிய எமது திருப்பேரவையின் ஆணைக்குழுவானது நாம் ஏன் நெருங்கிய ஐக்கியத்தைக் கடைப்பிடிக்கிறோம் என்பதற்கான பின்வரும் உதவக்கூடிய விளக்கத்தை வழங்குகிறது:

"நெருங்கிய ஐக்கியமானது விசுவாசத்திலே அறிக்கையிடும் ஐக்கியத்தின் தொழிற்சார்பினைத் தவிர்த்திட நாடுகிறது. அப்படியான ஐக்கியத்தில், உண்மையிலேயே ஒற்றுமையின்மையும் இணக்கப் பாடின்மையும் உள்ளது. அது பரிசுத்த திருவிருந்தின் நிர்வகிப்புக்கான வேதாகம தேவைப்பாடுகளுக்கு உண்மையாக இராததுடன் (1 கொரி. 11:27 ஐத் தொடர்வன; ஒப்பிடுக 10:16–17) வேதாகத்தின் தெளிவான உபதேசங்களைக் கேள்விகேட்போர்களையோ அல்லது மறுப்போர்களையோ கிறிஸ்தவ சபையானது அதன் பீடங்களுக்கு வரவேற்பதால் வீழ்ந்துபட்ட மனுக்குலத்துக்கு உதவிடவும் மாட்டாது.

"நெருக்கமான ஐக்கியத்தைக் கடைப்பிடிப்பதற்கான காரணங்கள் "திறந்த ஐக்கியம்' கொள்கைக்குப் பழக்கப்பட்ட கிறிஸ்தவர்களால் அநேகமாக தப்பாக எண்ணப்படுவதுண்டு. ஏன் நெருக்கமான ஐக்கியம்? எனும் தலைப்பிலான ஒரு பரப்புரைப் பிரசுரத்திலே நெருக்கமான ஐக்கியத்துக்கான காரணம் பின்வருமாறாக விளக்கப்பட்டுள்ளது:

'எனவே, நெருக்கமான ஐக்கியத்தைக் கடைப்பிடிக்கும் போது, சக பரிசுத்தவான்கள் திருவிருந்தின் ஆசீர்வாதங்களைப் பெறுவதைத் தடுக்கவிரும்புவதாக லூத்தரன் அவை இல்லை. அவர்கள் வேறுபிரிந்தவர்களாக இருக்க விரும்புவதோ அல்லது பிறர்மீது தம்மை நீதிபதிகளாக எண்ணிக்கொள்பவர்களும் அல்ல. நெருக்கமான ஐக்கியத்தின் வழக்கமானது அன்பினாலே தூண்டப்பெற்றதும், வேதாகமத்தின் அடிப்படையில் மாத்திரம் எனும் மஇதயபூர்வமான உறுதிப்பாட்டிலே பிறந்ததுமாக இருப்பதால் நாம் கிறிஸ்துவின் கட்டளையைப் பின்பற்றியாகவேண்டும். இதன் அர்த்தம் என்னவெனில், எமக்குத் தெரிந்திராத நம்பிக்கை கொண்டுள்ளவர்களைக் கர்த்தரின் பந்தியிலே அனுமதிக்க மறுத்தல் என்பதாகும். ஒருவர் தனது நலனுக்காகவே என்றிருந்தாலுங்கூட, அவர் தீங்கானதைச் செய்யும்படி அனுமதிப்பதுதான் அன்பு காட்டுதல் என்பதல்ல. அவர்கள் வேதாகமத்தின் ஒரு சில சத்தியக்கோட்பாடுகளிலே உண்மையினின்று வழுவியுள்ள கிறிஸ்தவ சரீரத்தின் அங்கத்தவர்களாக இருந்தாலுமென்ன, விசுவாசத்திலே தவறிழைக்கும் அனைத்துக் கிறிஸ்தவர்களுக்கும் எமது ஐக்கியத்தைத் திறப்பதால், இத்தத் தவறான உபதேசத்தின் தீமையை நாம் குறைத்து மதிப்பிட்டுவிடக் கூடாது [டெஃப்னர் Deffner, *ஏன் நெருங்கிய ஐக்கியம்?* பக். 14].

"இநதக் கொள்கைக்கு அமைவாக, விசுவாசத்தின் ஐக்கியத்தை அறிக்கையிடுவதாகக் கர்த்தரின் பந்தியைக் கொண்டாடுவதும் பெறுவதும் உள்ளது. அதேவேளை, உணர்வீகமான மேய்ப்பர் கரிசினைத் தேவைகள் கடைப்பிடிக்க வேண்டியதாக எழும் சந்தர்ப்பங்கள் இருக்கும் என்பதை இனங்கண்டுகொண்டவர்களாக, திருப்பேரவையானது ஒரு உத்தியோகபூர்வ நடைமுறையினை நிலைப்படுத்தியுள்ளது. அதன் படியான முன்தேவைப்பாடு எதுவெனில், மிசூரி பேரவையின் லூத்தரன் சபையின் போதகர்களும் அவையினர்களும் அவசர சூழ்நிலைகள், மற்றும் விசேஷ மேய்ப்பர் பராமரிப்புத் தேவைகள் எழும் சூழ்நிலைகள் தவிர மற்றப்படி எம்முடன் தற்போது ஐக்கியத்தில் இருக்கும் பேரவைகளைச் சேர்ந்த தனிநபர்களுடன் மாத்திரமே பந்தி ஐக்கியம் கொள்ளவேண்டும் என்பதாகும். இந்த நடைமுறையினைக் கைக்கொள்வதனூடாக, பேரவையின் அங்கத்தவர்களாக உள்ள அல்லது பேரவையானது பீட மற்றும் பிரசங்கபீட ஐக்கியம் கொண்ணிருக்கும் சபையின்களாகிய தனிநபர்கள் மாத்திரமே பொதுவாக பந்தி ஐக்கியம் கொள்ளப்படுவதனால், போதகர்களும் அவையினர்களும் வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டு லூத்தரன் அறிக்கை எழுத்தாக்கங்களால் அறிவிக்கப்பட்டதான கிறிஸ்துவின் சுவிசேஷத்துக்கான தமது நேர்மையினைப் பாதுகாத்துக் கொள்வார்கள்."

"எவ்வித விசுவாசத்தினர், அவையினர் அத்துடன் /அல்லது சபைப்பிரிவமைப்பைச் சேர்ந்தவர்கள் எவராயினும் பீடத்தண்டை வருகையிலே எவ்வித பொருட்டுமின்றி அவர்களுக்குத் திருவருட்சாதனங்களை வழங்குவதானது திறப்புகளின் பணியை உண்மைத்தனமிழந்து நடாத்துவதாக அமையும். திறந்த ஐக்கியத்தைக் கைக்கொள்வதானது தேவனுடைய மந்தையின் ஆன்மிகப் பராமரிப்புப் பொறுப்பை ஏற்றுள்ளவர்களால் மேற்கொள்ளப் படும் ஊழியப்பணிகளில், சபை ஒழுக்காற்றினைக் கௌரவமான முறையிலே மேற்கொள்வதைக் கடினமானதாக்கும் அல்லது அசாத்தியமாக்கிவிடும்" (எபி. 13:17; ஒப். யோவான் 20:22–23; அப். நட. 20:27–28; 1 கொரி 4:1–2. *கர்த்தரின் பந்தி பற்றிய இறையியலும் ஒழுங்கும்,* பக். 21–23)

## முடிவாக

தேவனுடைய பரிசுத்த வசனத்தின் அடிப்படையிலே, எமது லூத்தரன் சபையானது பண்டைய, வேதாகம மற்றும் அறிக்கையிடும் நெருக்கமான ஐக்கியத்தை எமது மெய்யான விசுவாசத்துக்கான களிப்புமிகு சாட்சியினை வழங்குவதற்காகத் தொடர்ந்தும் கைக்கொண்டு வருகிறது. நாம் கர்த்தரின் சரீரம் மற்றும் அவரது இரத்தத்தை பரிசுத்த திருவருட்சாதனத்திலே உண்மைத்தனத்துடன் நிர்வகிக்கும்போது, இதைத்தான் கர்த்தர் எம்மிடம் செய்யும்படி கூறியதை நம்பியவர்களாக நெருக்கமான ஐக்கியத்தைக் கைக்கொள்கிறோம்.

நெருக்கமான ஐக்கியம் என்பது மிசூரி பேரவை–லூத்தரன் சபையால் மாத்திரம் கைக்கொள்ளப்படும் தனித்துவமான ஒரு வழக்கம் அல்ல. ரோமன் கத்தோலிக்க மற்றும் சீர்திருத்த ஒன்று கூடுகைகளின் அங்கத்தவர்களாய் உலகெங்கனும் உள்ள பெரும்பான்மையான கிறிஸ்தவர்களாலும் கைக்கொள்ளப்படுகிறது.

இந்தச் சிறிய விளக்கமானது எமது கர்த்தருக்கும் அவரது திருவருட்சாதனத்துக்குமான எமது அன்பும், மற்றும் தனிநபருக்கான எமது அன்புந்தான் நாம் நெருக்கமான ஐக்கியத்தைக் கைக்கொள்வதற்குக் காரணம் என்பதை நீங்கள் புரிந்துகொள்ளவோ அல்லது வேறொருவர் புரிந்துகொள்ளவோ உதவும் என எதிர்பார்க்கிறோம்.

கலாநிதி A.L. பர்ரி (Barry)
தலைவர்,
லூத்தரன் சபை – மிசூரி திருப்பேரவை